# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:233/மா/2024**

**நாள்: 31.12.2025**

கோ. கோவிந்தராஜ்
சென்னை–83 --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–10
பெருநகர சென்னை மாநகராட்சி
(2) உரிமையாளர், ஆச்சி நம்ம கிச்சன்,
சென்னை–83. --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவரின் 30.09.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.09.2024 அன்று பெறப்பட்டு 233/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும்ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் தனது 30.09.2024 நாளிட்ட மனுவுடன் இணைத்துள்ள 20.02.2023 நாளிட்ட மனுவின் நகலில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "கடந்த 2019 ஆண்டு கதவு எண்.69, 7வது அவின்யூ, அசோக் நகர், சென்னை–83 முகவரியில் இருந்த பழைய வீட்டை இடித்து இருபுற சாலைகளில் 3 தளம் வணிக வளாகம் கட்டிடம் கட்டும் பணிகள் நடந்து வந்ததை மனுதாரராகிய நான் அவ்வழியாக எனது குழந்தைகளை அசோக் நகர் மகளிர் மேல்நிலை பள்ளிக்கு அழைத்து சென்று வரும் போது கண்டேன். சில மாதங்களில் இரு புற சாலைகளில் முன் பகுதி அமைத்து மாநகராட்சிக்கு சொந்தமான மழைநீர் கால்வாய்களை மற்றும் நடைபாதைகளை ஆக்கிரமித்து ஸ்டெப்ஸ் அண்டு ரேம்புகள்அமைக்கப்பட்டது. சுமார் மூன்று தளத்தில் தூத்துக்குடி அய்யர் ஓட்டல் என்று பெயரிட்டு துவக்கப்பட்டு அங்கு வரும் வாடிக்கையாளர்கள் 10வது அவன்யூ, 7வது அவன்யூ சாலைகளில் ஓட்டல் முன்புறம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நடைபாதைகளில் நூற்றுக்கு மேற்பட்ட இருசக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள் தொடர்ந்து நிறுத்தி வந்ததால் நடைபாதைகளில் பொது மக்கள் மற்றும் மனுதாரராகிய நானும் பயன்படுத்த முடியாமல் நடு சாலைகளில் செல்வதால் போக்குவரத்து இடையூறும் நெரிசலும் ஏற்பட்டு விபத்துக்கள் உருவாகும் நிலை ஆனது. ஆக்கிரமிப்புகளை அகற்ற கடந்த 09.12.2019 அன்று சென்னை மாநகராட்சி ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் இரு உதவி பொறியாளர்களுக்கு ஒப்புகையுடன் கூடிய புகைப்படங்கள், வீடியோ உடன் அளிக்கப்பட்ட புகார்கள் இம்மனுவுடன் பின்புறம்

இணைப்பு. சென்னை மாநகராட்சி அதிகாரிகள் சில நாட்களில் ஆக்கிரமிப்பை அகற்றும் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இம்மனுவுடன் இணைப்பு. கடந்த 09.12.2019 அன்று இக்கட்டிடத்திற்கு சென்னை மாநகராட்சி வழங்கிய வரைபடம் NOC கேட்டு RTI–யை மனு அளிக்கப்பட்டது. வழங்கிய வரைபடத்தில் தரை தளம் மற்றும் முதல் தளம் கட்டவும் இருபுற சாலைகளில் முன்பகுதி அமைத்து கொள்ளலாம் என்று தெரிவித்து வழங்கிய வரைபடம் பின்புறம் இணைப்பு. கூடுதலாக ஒரு தளம் ஆக மூன்று கட்டப்பட்டது தெரிய வந்தது. NOC அளிக்கவில்லை கடந்த 19.01.2019 அன்று இக்கட்டிடத்திற்கு மின்சாரம் இணைப்பு வழங்க வாரிய அதிகாரிகள் உரிமையாளரிடம் பெறப்பட்ட NOC வரைபடம் கேட்டு RTIமனு அளிக்கப்பட்டது. 03.12.2019 அன்று E.B. RTI அதிகாரி வரைபடம் NOC பெறாமலே இணைப்புகள் வழங்கியதை ஒப்புக் கொண்டு அளிக்கப்பட்ட பதில் மனு இம்மனுவுடன் பின்புறம் இணைப்பு. 16.12.2019 அன்று குடிநீர் கழிவு நீர் வாரிய அதிகாரிக்கு இக்கட்டிடத்திற்கு இணைப்புகள் வழங்கும்போது உரிமையாளரிடம் பெறப்பட்ட வரைபடம் NOC கேட்டு RTI மனு அளிக்கப்பட்டது. 18.12.2019 அன்று அளிக்கப்பட்ட பதில் மனுவில் வரைபடம் NOC பெறாமலே குடிநீர் கழிவு நீர் வழங்கப்பட்டதாக ஒப்புக்கொண்டு அளிக்கப்பட்ட சான்று பின்புறம் இணைப்பு. கடந்த சில மாதங்களுக்கு முன் இவ்வணிக வளாக கட்டிடத்தை தரை தளத்தில் முழுமையாக இடித்து பார்க்கிங் இடங்களில் ஆக்கிரமித்து முழுமையான கட்டுமான வேலைகள் செய்யப்பட்டதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம் பிறகு நம்ம ஆச்சி என்ற ஓட்டல் மூன்று தளத்தில் துவக்கப்பட்டது. தற்போது இவ்வணிக வளாகத்திற்கு பார்க்கிங் வசதிகள் இல்லாததால் இருபுற சாலைகளில் உள்ள நடைபாதைகளிலும் சாலைகளிலும் ஆக்கிரமித்து 200–க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் நான்கு சக்கர வாகனங்கள் கனரக ஜென்ரேட்டர் வாகனத்தை நிரந்தரமாக நடைபாதையில் நிறுத்தி அவ்வோட்டல் கட்டிடத்திற்கு மின்சார இணைப்பு செல்வதையும் இம் மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். சென்னை மாநகராட்சி வரைபடம் NOC போக்குவரத்து காவல் துறை, தீயணைப்பு துறை சான்றுகள் இல்லாமல் கையூட்டு பெற்றுக் கொண்டு சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் உதவி வருவாய் துறை அலுவலர் திரு.பா.துரைராஜ் அவர்கள் Hotel Licences கொடுக்கப்பட்டது தெரிய வந்ததால் Licence இரத்து செய்ய 19.01.2023 அன்று புகார் அளிக்கப்பட்டது. இது வரையில் எவ்வித பதிலும் இல்லை.ஆகவே, இக்கட்டிடத்தை இடித்து முறையாக பார்க்கிங் வசதி செய்யும்வரை இக்கட்டிடத்திற்கு வழங்கிய குடிநீர் கழிவு நீர், மின்சார இணைப்பு, ஓட்டல் உரிமம் அனைத்தையும் இரத்து செய்து 7 நாட்களில் நடவடிக்கை எடுத்து பதில் அளிக்க உத்தரவிட கோரி தன்னலம், பொதுநலம் கருதி இம்மனு அளிக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 09.12.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரிடமிருந்து அறிக்கை பெறப்படாததால் 07.04.2025 நாளிட்ட நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் முதுநிலை வருவாய் அலுவலரின்08.12.2025 நாளிட்ட கடிதம் ம.அ.10.வ.து. ந.க. எண் ஆர்3/2364/2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

''பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, வருவாய் துறை, கோட்டம் 132, எண் 69, 7வது அவென்யூ, அசோக் நகர் சென்னை–600 083 என்ற விலாசத்தில் இயங்கி வரும் AACHI NAMMA KITCHEN என்ற உணவகம் வாகன நிறுத்தம் இன்றி செயல்பட்டதால் தொழில் உரிமத்தை ரத்து செய்ய கோரி 19.1.2023 அன்று திரு. கோ. கோவிந்தராஜ் அவர்கள் புகார் மனு அளித்துள்ளார்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் மன்றத்தில் திரு. கோ. கோவிந்தராஜ் அவர்கள் 30.09.2024 அன்று மேல்முறையீடு செய்துள்ளார்

இந்நிலையில் உணவகத்தை கள ஆய்வு செய்து கூடுதல் ஆணையாளர் (போக்குவரத்து பிரிவு) காவல் ஆணையாளர் அலுவலகம், வேப்பேரி, சென்னை–600 007 அவர்கள் மூலம் NOC வேண்டி 30.01.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. குறிப்பிட்ட காலகெடுவிற்குள் தடையின்மைச் சான்று வழங்கப்படாததால் (TNULB ACT 2023 of SEC.289 பிரிவு 10) சென்னை நகரில் உள்ள உணவு விடுதி அல்லது உணவகத்திற்கான உரிமம் தொடர்பான விண்ணப்பத்திற்கு, ஆணையர் உரிமம் வழங்குவதற்கு முன் சம்பந்தப்பட்ட காவல் துணை ஆணையரிடமிருந்து ஆட்சேபனை இல்லா சான்றிதழை பெற வேண்டும்.

பிரிவு–11 வணிகம் அல்லது வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான உரிமத்திற்கான விண்ணப்பம், அது பெறப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் பெறப்படாவிட்டால், விண்ணப்பித்த உரிமம், அந்த காலக்கெடு முடிந்தவுடன் வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023, 289–பிரிவு–10 மற்றும் 11–ன்படி விண்ணப்பதாரருக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே பெருநகர சென்னை மாநகராட்சி விதிகளுக்கு உட்பட்டே தொழில் உரிமங்கள் வழங்கப்பட்டு வருகிறது என்பதனை தங்களின் கனிவான கவனத்திற்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.12.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 09.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''சென்னை–83, அசோக் நகர், 7வது அவின்யூ, கதவு எண்.69–ல் பழைய வீட்டை இடித்து விட்டு இருபுற சாலைகளில் 3 தளம் வணிக வளாக கட்டிடம் மாநகராட்சிக்கு சொந்தமான மழைநீர் கால்வாய் மற்றும் நடைபாதைகளை ஆக்கிரமித்து Steps & Ramp அமைக்கப்பட்டு சுமார் 3 தளத்தில் தூத்துக்குடி அய்யர் ஒட்டல் துவக்கப்பட்டு, தற்போது அக்கட்டிடத்தின் முன் ஆக்கிரமிப்புகள் இடிக்கப்பட்டு புதிதாக நம்ம ஆச்சி ஒட்டல் துவக்கப்பட்டது. அங்கு வரும் வாடிக்கையாளர்கள் 10வது அவின்யூ, 7வது அவின்யூ சாலைகளில் ஒட்டல் முன்புறம் இரு சக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள் தொடர்ந்து நிறுத்தி ஆக்கிரமிப்பு செய்து இடையூறு செய்து வருவதால் நடைபாதைகளில், பொதுமக்கள் மற்றும் மனுதாரராகிய நானும் அருகில் உள்ள பள்ளிகளுக்கு குழந்தைகளை நடைபாதையில் அழைத்து செல்ல இயலவில்லை. நடைபாதையை பயன்படுத்த முடியாமல் நடு சாலைகளில் செல்வதால் போக்குவரத்து இடையூறும், சாலைகளில் நெரிசலும் ஏற்பட்டு விபத்துக்கள் உருவாகும் நிலை ஏற்படுகிறது. இதுகுறித்து சென்னை மாநகராட்சிக்கு புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை.

மேலும், வணிக வளாக கட்டிடத்தில் அமைந்திருக்கும் இவ்வோட்டலுக்கு, போக்குவரத்து காவல் துறை, தீயணைப்பு சான்றுகள் இல்லாமலும் மற்றும் பார்க்கிங் வசதி இல்லாமலும் இயங்குவதால், இக்கட்டிடத்தை இடித்து பார்க்கிங் வசதியுடன் கட்டிடம் கட்டவும், குடிநீர், கழிவு நீர், மின்சார இணைப்பு, ஒட்டல் உரிமம் அனைத்தையும் இரத்து செய்யமாறும் மேற்கண்ட கட்டிடம் விதிமீறி கட்டப்பட்டுள்ளதாலும் உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன்மண்டல அலுவலர் சார்பாக இளநிலை பொறியாளர் மற்றும் உரிமம் ஆய்வாளர் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 09.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள உணவகம் அமைந்துள்ள கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டது. கட்டிடத்தின் முன்புறம் அமைந்திருந்த சாய்வுத் தளம் அகற்றப்பட்டது. மேலும், அங்கு வாகனங்களை நிறுத்துவதை தடுக்க போக்குவரத்து காவல் துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஆச்சி நம்ம கிச்சன் உணவகத்திற்கு Restaurant என்ற அடிப்படையில் இயங்குவதற்கு Licence for Trade 08.05.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறையால் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தீயணைப்புத் துறையின் அனுமதி 15.05.2025 அன்று பெறப்பட்டுள்ளது மற்றும் தொழிலாளர் துறையால் 31.12.2025 வரை உணவகம் நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலே குறிப்பிட்டுள்ள அனுமதி கடிதங்களின் நகல்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கின்றோம்."

7. இரண்டாம் எதிர்மனுதாரர் ஆச்சி நம்ம கிச்சன் என்ற உணவகத்தின் உரிமையாளர் சார்பாக திரு. B. ஞானசம்பந்தம் மற்றும் திருமதி சகிலா பாஸ்கரன்ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 09.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

மனுதாரரின் குற்றச் சாட்டுக்களை முழுமையாக மறுக்கிறோம். எங்கள் உணவகத்திற்கு பின்வரும் அனுமதி சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் :

1) Trade Licence
2)FSSAI Licence
3) Fire Safety Licence
4) Parking Agreement
5) GST Registration Certificate
6) Catering Establishment Certificate
7) Interim stay order

எங்கள் உணவகத்திற்கு ஒரே நேரத்தில் 65 நபர்கள் அமர்ந்து உணவு அருந்தும் வசதி உள்ளது. மேலும் வாடிக்கையாளர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு உணவகத்தின் உள்ளே போதிய பார்க்கிங் வசதி உள்ளது. மேலும் எங்கள் உணவகத்திலிருந்து 300 மீட்டர் தொலைவில் 3500 சதுரடி வாடகைக்கு எடுக்கப்பட்டு, வாகனங்களை நிறுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் புகைப்படத்தில் காண்பித்த வாகனங்கள் எங்கள் உணவகத்திற்கு வந்த வாடிக்கையாளர்களின் வாகனங்கள் அல்ல. அவை பொதுமக்கள் நிறுத்திய வாகனங்கள் ஆகும்.

எங்கள் கட்டிடத்தின் உரிமையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன்அலுவலகத்தால், Lock & Seal தாக்கீது வழங்கியதை எதிர்த்து Tamil Nadu Town and Country Planning Act, 1971, under section 80-A (3), சென்னை–9, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையிடம் சீராய்வு மனு அளிக்கப்பட்டு, அத்துறை 17.10.2025 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி கடும் நடவடிக்கை எடுக்க கூடாது என்று இடைகால உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள அனுமதி கடித நகல்களுடன், 09.12.2025 நாளிட்ட எங்களது எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கிறோம்.

எனவே, மேலே குறிப்பிட்டுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் மனுதாரரின் புகாரினை தள்ளுபடி செய்து உரிய உத்தரவினை பிறப்பிக்குமாறு இம்முறை நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.''.

8. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம்,எதிர்மனுதாரர்களாகிய பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன்முதுநிலை வருவாய் அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளர் மற்றும் உரிமம் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் ஆச்சி நம்ம கிச்சன் என்ற உணவகத்தின் உரிமையாளர் சார்பாக திரு. B. ஞானசம்பந்தம் மற்றும் திருமதி சகிலா பாஸ்கரன் ஆகியோரின்வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சென்னை–83, அசோக் நகர், 7வது அவின்யூ, கதவு எண்.69–ல் பழைய வீட்டை இடித்து விட்டு இருபுற சாலைகளில் 3 தளம் வணிக வளாக கட்டிடத்தினை மாநகராட்சிக்கு சொந்தமான மழைநீர் கால்வாய் மற்றும் நடைபாதைகளை ஆக்கிரமித்து Steps & Ramp அமைக்கப்பட்டு தூத்துக்குடி அய்யர் ஒட்டல் துவக்கப்பட்ட கட்டிடத்தின் முன் உள்ள ஆக்கிரமிப்புகள் இடிக்கப்பட்ட பின்னர், புதிதாக துவக்கப்பட்ட ஆச்சி நம்ம ஒட்டலுக்கு வரும் வாடிக்கையாளர்கள் ஒட்டலுக்கு முன்புள்ள நடைபாதைகளில், தங்களது வாகனங்களை நிறுத்தி வருவதால், பொதுமக்கள் மற்றும் மனுதாரரர் அருகில் உள்ள பள்ளிகளுக்கு குழந்தைகளை அந்த நடைபாதையில் அழைத்து செல்ல முடியாமல் நடு சாலைகளில் செல்வதால் போக்குவரத்து இடையூறும், விபத்துக்களும் நெரிசலும் ஏற்படுகிறது என்பதும், இதுகுறித்து சென்னை மாநகராட்சிக்கு புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், வணிக வளாக கட்டிடம் விதிமீறி கட்டப்பட்டுள்ளதாலும், அக்கட்டிடத்தில் அமைந்திருக்கும் இவ்வோட்டலுக்கு, போக்குவரத்து காவல் துறை, தீயணைப்பு சான்றுகள் இல்லாமலும் மற்றும் பார்க்கிங் வசதி இல்லாமலும் இயங்குவதால், இக்கட்டிடத்தை இடித்து பார்க்கிங் வசதியுடன் கட்டிடம் கட்டவும், குடிநீர், கழிவு நீர், மின்சார இணைப்பு, ஒட்டல் உரிமம் அனைத்தையும் இரத்து செய்வதற்கும் உரிய சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள நம்ம ஆச்சி கிச்சன் உணவகம் அமைந்துள்ள கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டு, கட்டிடத்தின் முன்புறம் அமைந்திருந்த சாய்வுத் தளம் அகற்றப்பட்டது என்பதும், அங்கு வாகனங்களை நிறுத்துவதை தடுக்க போக்குவரத்து காவல் துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதும்,மேற்கண்ட ஆச்சி நம்ம கிச்சன் உணவகத்திற்கு Restaurant என்ற அடிப்படையில் இயங்குவதற்கு Licence for Trade 08.05.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறையால் அளிக்கப்பட்டுள்ளது என்பதும், தீயணைப்புத் துறையின் அனுமதி 15.05.2025 அன்று பெறப்பட்டுள்ளது என்பதும், தொழிலாளர் துறையால் 31.12.2025 வரை உணவகம் நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் முதுநிலை வருவாய் அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளர் மற்றும் உரிமம் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரரின் குற்றச் சாட்டுக்களை முழுமையாக மறுப்பதாகவும், தங்கள் உணவகத்திற்கு 1) Trade Licence, 2)FSSAI Licence, 3) Fire Safety Licence, 4) Parking Agreement, 5) GST Registration Certificate, 6) Catering Establishment Certificateஆகிய அனுமதி சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளது என்பதும், தங்கள் உணவகத்திற்கு ஒரே நேரத்தில் 65 நபர்கள் அமர்ந்து உணவு அருந்தும் வசதி மற்றும் வாடிக்கையாளர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு உணவகத்தின் உள்ளே போதிய பார்க்கிங் வசதியும் மேலும் உணவத்திலிருந்து 300 மீட்டர் தொலைவில் 3500 சதுரடி

வாடகைக்கு எடுக்கப்பட்டு, வாகனங்களை நிறுத்த வசதி செய்யப்பட்டுள்ளது என்பதும், மனுதாரார் புகைப்படத்தில் காண்பித்த வாகனங்கள் தங்கள் உணவகத்திற்கு வந்த வாடிக்கையாளர்களின் வாகனங்கள் அல்ல என்பதும் அவை பொதுமக்கள் நிறுத்திய வாகனங்கள் ஆகும் என்பதும், தங்கள் கட்டிடத்தின் உரிமையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன்அலுவலகத்தால், Lock & Seal தாக்கீது வழங்கியதை எதிர்த்து Tamil Nadu Town and Country Planning Act, 1971, under section 80-A (3)-ன் கீழ், சென்னை–9, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையிடம் சீராய்வு மனு அளிக்கப்பட்டு, அத்துறை 17.10.2025 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி கடும் நடவடிக்கை எடுக்க கூடாது என்று இடைகால உத்தரவு பிறப்பித்துள்ளது என்பதும், மேலே குறிப்பிட்டுள்ள ஆதார ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரரின் புகாரினை தள்ளுபடி செய்து உத்தரவு வழங்குமாறு கோரியிருப்பது இரண்டாம் எதிர்மனுதாரரான ஆச்சி நம்ம கிச்சன் என்ற உணவகத்தின் உரிமையாளர் சார்பாக திரு.B. ஞானசம்பந்தம் மற்றும் திருமதி சகிலா பாஸ்கரன் ஆகியோரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், கட்டிடத்தின் உரிமையாளர், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971 (Tamil Nadu Town and Country Planning Act, 1971) பிரிவு 80-Aன் கீழ் அரசிற்கு சீராய்வு மனு அளிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளதால், அரசின் உத்தரவினை எதிர்பார்த்து அதன் தொடர் நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு.கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43, 15வது தெரு,
அசோக் நகர், சென்னை–600 083.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 117 N.S.K. சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

(4) உரிமையாளர்,
நம்ம ஆச்சி கிச்சன்,
எண் 31/69, 7வது அவென்யூ, அசோக் நகர், சென்னை–600 083.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

நகல்:

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உ.திரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்